**இலங்கை காலநிலை நிதிய (தனியார்) கம்பனியி - 2023**

-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காலநிலை நிதிய (தனியார்) கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை சிறிய மற்றும் நடுதர அளவிலாக தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை சிறிய மற்றும் நடுதர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன், அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்துடன் தொடர்பான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் முக்கிய வருமான மூலமான சேவை வழங்கல் மேற்கொள்ளும் போது பாவனையாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இருந்ததுடன் அந்த உடன்படிக்கைகள் பிரகாரம் உடன்பட்ட வருமானத்தின் 40 சதவீதம் அசைவு முற்பணமாகவும் (Mobilization Advance) எஞ்சிய 60 சதவீதம் சேவைச் சான்றிதழ் விநியோகிக்கும் போது செலுத்த வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும் கம்பனியினால் சேவை வழங்கல் வருமானத்தை இனங்காணும் போது உடன்படிக்கையில் ஈடுபடும் சந்தர்ப்பத்திலும் மொத்த வருமானத்தை இனங்காண்பதாக அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2023 ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டுள்ள ரூபா 27,460,515 ஆன வருமானங்களின் விவேக நுட்பம் உறுதியாகவில்லை. இவ் வருமானத்தில் இருந்து 2024 திசெம்பர் 09 திகதியளவிலும் சேவையை வழங்கி பூரணப்படுத்தாத அளவு ரூபா 7,179,662 ஆகவிருந்தது. அதன் பிரகாரம் வருமானங்களை இனங்காணும் போது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டுக் நியம இலக்கம் 23.14 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களிற்கான கணக்கீட்டு நியமம் இலக்கம் 23.14 பிரிவின் பிரகாரம் எதிர்காலத்தில் வருமானத்தை இனங்காண நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமம் பிரகாரம் கம்பனியின் வருமானத்தை சரியாக இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கம்பனிக்கு சொந்தமான கிரயம் ரூபா 5,320,075 ஆன் ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலம் முடிவடைந்துள்ள போதும் கணக்காய்வு ஆண்டினுள் அச் சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. இதன் பிரகாரம் சிறிய மற்றும் நடுதர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டுக் நியமம் 17 பிரிவின் 17.19 இலக்க பந்தி பிரகாரம் அந்த | கம்பனியின் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து தருமாறு எனது இலக்கம் SLCF/AF/Val./75 மற்றும் 2024.07.24 திகதிய கடிதம் மூலம் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. மீண்டும் SLCF/AF/Val./75 மற்றும் 2024.10.09 திகதிய கடிதம் மூலம் நினைவூட்டல் | கணக்கீட்டு நியமம் பிரகாரம் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை வருடாந்தம் மதிப்பிட வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலம் சரியாக மதிப்பிடப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | இலங்கை சிறிய மற்றும் நடுதர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டுக் நியமம் 29.6 பிரிவின் பிரகாரம் கம்பனியினால் வருமானத்தின் மீது மீளாய்வாண்டிற்குரியதாக ரூபா 4,112,708 ஆன வரி வருமானத்தை இனங்காண வேண்டிய போதும் அதன் வரி பொறுப்பு நிதிக்கூற்றினுள் இனங்காண நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கம்பனியின் பணிப்பாளர் சபையின் கவனத்தை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமம் பிரகாரம் வரி செலவினத்தை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியினால் கணக்கீட்டுக் கொள்கையினுள் காண்பித்துள்ளவாறு ஐயக்கடன் மற்றும் அறவிட முடியாக்கடனிற்காக மீளாய்வாண்டினுள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. | 2023 ஆண்டினுள் ஐயக்கடன் மற்றும் அறவிட முடியாக் கடனிற்காக ஒதுக்கீடு செய்யப்படவில்லை. | கணக்கீட்டு நியமம் பிரகாரம் ஐயக்கடன் மற்றும் அறவிட முடியாக் கடனிற்காக ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளிற்குரியதாக ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பங்களப்புத் தொகை செலுத்துதல் தாமதமானதன் மீது ரூபா 507,700 ஆன மிகை அறவீடு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை தாமதமானதன் மீது 2021, 2022 மற்றும் 2023 ஜுன் வரை ரூபா 64,804 ஆன மிகை அறவீடு விதிக்கப்பட்டிருந்த போதும் கம்பனியினால் அந்த மிகை அறவீட்டுத் தொகையை கணக்கீடு செய்ய மற்றும் செலுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டிற்குரியதாக ஊழியர் சேமலாப நிதியத்திற்காக ரூபா 169,225 ஆன மிகை அறவீடு கம்பனிக்கு விதிக்கப்படவில்லை. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக விதித்துள்ள மிகை அறவீடானது 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கம்பனிக்க கிடைத்திருக்கவில்லை. | சட்டத்தின் மூலம் பரிந்துரைத்த பிரகாரம் உரிய காலம் தாமதிக்க முன்னர் பங்களிப்புத் தொகையை செலுத்த வேண்டுமென மற்றும் விதிக்கப்பட்ட மிகை அறவீட்டை செலுத்த வேண்டுமென. |

**1.6 சட்டம், விதி, பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீரமமானங்களிற்கு இணங்காமைகள்**

| | சட்டம், விதி, பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 இலக்க கம்பனி சட்டத்தின் 131 (1) பரிவு | ஒவ்வொறு கம்பனியினாலும் சட்டத்தின் ஐந்தாம் அட்டவைணயில் குறிப்பிட்டுள்ள கம்பனியின் வெளியிடப்பட்ட மூலதனம், கம்பனியினால் வெளியிடப்பட்டுள்ள மொத்த பங்குகளின் எண்ணிக்கை, இழக்கப்பட்ட பங்கு எண்ணிக்கை, கம்பனி கூட்டிணைக்கப்பட்ட திகதி மற்றும் அலுவலகத்தின் முகவரி போன்ற விடயங்கள் உள்ளிட்ட வருடாந்த அறிக்கை, கீழான நபர்களின் ஒவ்வொறு ஆண்டிற்கு ஒரு முறை உரிய படிவத்தில் பதிவாளரிற்கு கையளிக்க வேண்டிய போதும் கம்பனியினால் 2020 ஆண்டின் பின்னர் அவ்வாறான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2020 வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதுடன் 2021 அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இப் பணிகளை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கம்பனி சட்ட பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2022 ஜனவரி 28 திகதிய மற்றும் இலக்கம் 02/2022 கொண்ட சுற்றறிக்கை | சுற்றிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக நிறைவேற்று அல்லாத பதவிகளிற்கு உரியதாக ரூபா 166,306 ஆன தொகை மீளாய்வாண்டினுள் தொலைபேசி படிகளாக வழங்கப்பட்டு இருந்தது. | ஆளணியில் சாரதி/ அலுவலகப் பணி உதவியாளர் பதவி தவிர்ந்த ஏனைய பதவிகள் நிறைவேற்று பதவிகளாகும். தற்போது பயிற்சி கருத்திட்ட நிறைவேற்று அலுவலர்களிற்கு கொடுப்பனவு செய்யப்படுவதில்லை. நிறுவனத்தில் உள்ள கடமை பொறுப்புக்களின் பிரகாரம் பல்வேறு சந்தர்ப்பங்களில் சாரதி/ அலுவலகப் பணி உதவியாளர்களிற்கும் தொலைபேசி அழைப்புக்களை பெற்றுக் | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரித்துடையவர்களிற்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொள்ள நேரிடுவதால் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் அரச நிதிச் சுற்றறிக்கை :01/2020 (ii) மற்றும் 2022.01.12 திகதிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட சுற்றறிக்கையின் வழிகாட்டி இலக்கம் 2.3 | கம்பனி பணிப்பாளர் சபையினால் 2025 ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்துடன் செயல் நடவடிக்கை திட்டம், வருடாந்த வரவு செலவு திட்டம் வரிசை அமைச்சின் செயலாளரிற்கு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2024 ஆண்டிற்குரியதாக கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கை திட்டம், வருடாந்த வரவு செலவுத் திட்டம் வரிசை அமைச்சின் செயலாளரிற்கு மற்றும் பொது முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 வரிப் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 93 (1) பிரிவின் பிரகாரம் ஒவ்வொறு மதிப்பீட்டு ஆண்டு முடிவின் பின்னரும் 08 மாதங்களை விஞ்சாத காலத்தினுள் அந்த மதிப்பீட்டு ஆண்டிற்காக வருமான அறிக்கை ஒன்றை உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு கோவையிட வேண்டிய போதும் கம்பனியினால் 2023 ஆண்டிற்கான வருமான அறிக்கை 2024 ஒக்டோபர் 10 ஆம் திகதி வரையும் உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு கோவையிடப்பட்டு இருக்கவில்லை. | இது தொடர்பாக கம்பனியின் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரி சட்ட பிரிவின் பிகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் கம்பனியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,482,727 ஆன வருமானம் ஒன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 2,530,072 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 10,952,655 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு கம்பனியின் செயற்பாட்டு வருமானம் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமை இன்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட சுற்றறிக்கை தொடர்பான வழிகாட்டல் கைநூலின் 2 பந்தி பிரகாரம் கம்பனியினால் செயற்பாட்டு தொகுதி மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் நிறுவப்பட்டிருக்கவில்லை. | கம்பனியில் உள்ள வரையறுக்கப்பட்ட ஆளணியினுள் இயலுமான வரை செயற்பாட்டுத் தொகுதியை மற்றும் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கம்பனியின் மூலோபாய திட்டம் பிரகாரம் 2027 - 2028 ஆண்டுகளில் முயற்சிகள் வளத் திட்டமொன்றை (ERP) தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட சுற்றறிக்கை தொடர்பான வழிகாட்டல் கைநூலின் 7.3 பந்தி பிரகாரம் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் பிரதான செயலாற்றுகை சுட்டியை (KPI) அங்கீகார செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீட்டுடன் காலரீதியாக மீளாய்வு செய்திருக்கவில்லை. | 2024 ஆண்டிலிருந்து கம்பனியினால் பிரதான செயலாற்றுகை சுட்டியை (KPI) அங்கீகார செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீட்டுடன் பணிப்பாளர் சபை கூட்டங்களில் மீளாய்வு செய்யப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் பிரதான செயலாற்றுகை சுட்டியை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியினால் ரூபா 2,500,000 கிரயத்திற்கு மதிப்பீடு செய்திருந்த சுற்றாடல் அமைச்சிற்கு சொந்தமான | இந்த GG 9396 கொண்ட கெப் வண்டி சுற்றாடல் அமைச்சிற்கு சொந்தமான கெப் வண்டியாகும். இந்த வண்டியை கம்பனிக்கு கையளித்தில்லாததால் | உரியவாறு கெப் வண்டியை கம்பனிக்கு சுவீகரிக்க |

| | | |
|---|---|---|
| கெப் வண்டியொன்று 2012 ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்ட போதும் கணக்காய்வு திகதி வரையும் அந்த கெப் வண்டியை கம்பனிக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிநிலைமை கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. கெப் வண்டியை கையளித்த பின்னர் நிதிக்கூற்றில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நடடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட சுற்றறிக்கையின் வழிகாட்டி இலக்கம் 6.6 பிரகாரம் வரைவு செய்யப்பட்ட வருடாந்த அறிக்கை மற்றும் இறுதிக் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் கம்பனியினால் மீளாய்வாண்டின் இறுதிக் கணக்குகள் உரிய திகதிக்கு 07 மாதாங்கள் தாமதித்து 2024 செப்டம்பர் 03 திகதி சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. | 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை உரிய திகதியில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட சுற்றறிக்கையின் வழிகாட்டி இலக்கம் 4.2(h) பிரகாரம் கணக்காய்வுக் குழு 3 மாதங்களிற்கு ஒரு முறை நடாத்த வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும் 2023 ஆண்டின் போது கணக்காய்வுக் குழு கூட்டம் இரண்டு மாத்திரம் நடாத்தப்பட்டு இருந்தன. | தற்போது கணக்காய்வ மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் (04) இனை வருடாந்தம் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |